நாள்.23.09.2022

**அசல் வழக்கு எண். 177/2020**

**<u>வா.சா.1</u> – 1,2 பிரதிவாதிகள் <u>தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னை வைத்தியலிங்கம் சுவிகாரம் எடுத்துக்கொண்டாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தில் சுவிகார புத்திரன் என எழுதப்பட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் அ பட்டியல் சொத்து வைரக்கண்ணு அம்மாள் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி உயிலில் 1–வது அயிட்ட சொத்து சர்வே எண் 55/9ல் 8 1/2 ஏர்க்ஸ்–கு 20 செண்ட் 1975ம் ஆண்டு பாகபத்திரத்தில் தில்லைக்கண்ணுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 2–வது அயிட்ட சொத்து சர்வே எண் 62/14ஏ 11 ஏர்ஸ்–ல் 1 செண்டை வைத்தியலிங்கத்திற்கு பாகப்பிரிவினை படி 17–வது இன சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புல எண் 62/15ல் 4 ஏர்ஸ் 11 செண்டை 4வது இன சொத்தாக 1975ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி எனது பெரியப்பா வைத்தியலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புல எண் 62/14பி 1 1/2 ஏர்ஸ் 4 செண்ட் யாருக்கு ஒதுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் எனது பெரியப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது. புல எண் 52/6ல் 59 ஏர்சில் கீழ்புறம் 96 செண்டை பாகப்பிரிவினை பத்திரத்தில் அரும்பு என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் மீதமுள்ள 46 செண்டை யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனது பெரியப்பா வைத்தியலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது. புல எண் 57/5பி 2 1/2 ஏர்ஸ்–ல் 6 செண்ட் உயிலில் எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். புல எண் 57/5பி–ன் மொத்த விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புல எண்ணில் 90 செண்டை வைத்தியலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால்

சரிதான். புல எண் 57/6 பி–ல் 23 ஏர்ஸ்க்–கு 57 செண்ட் பாகப்பிரிவினை படி யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. உயில் ஆவணத்தில் கண்டுள்ள ஆ பட்டியல் சொத்தின் புல எண் 297/1 ல் எவ்வளவு விஸ்திரணம் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தானது பாகப்பிரிவினை படி யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. புல எண் 51/7 ல் 44 1/2 ஏர்ஸ்சில் 1 ஏக்கர் 5 செண்ட் மேல்புறம் பாகப்பிரிவினை படி யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் வைத்தியலிங்கம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது. பாகப்பத்திரத்தின் ஏ பட்டியல் சொத்தில் 1 ஏக்கர் 10 செணட் வைத்தியலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. புல எண் 57/4 பி 18 செண்டை யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. புல எண் 57/5 ஏ–ல் 35 1/2 ஏர்ஸ்–ல் 88 செண்ட் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் வைத்தியலிங்கம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது. எனது தந்தை எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2012 ம் ஆண்டு இறந்தார். என் தந்தை இறந்த சமயத்தில் நான் சிங்கப்பூரில் இருந்தேன் என்றால் சரிதான். என் தந்தைக்கு யார் கொல்லி வைத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் மனோபால் என்பவர் கொல்லி வைத்தார். புல எண் 55/10 ல் உள்ள மங்களுர் ஓட்டு வீட்டில் யார் குடியிருந்துவந்தார்கள் என்றால் தில்லைகண்ணு வகையறா குடியிருந்துவந்தார்கள். தில்லைகண்ணு குடியிருந்த வந்த ஓட்டுவீடானது புயலால் இடிந்துவிட்டதா என்றால் இல்லை அதற்கு முன்பாகவே இடிந்துவிட்டது. தில்லைகண்ணு குடியிந்த பழையவீடு இடிந்துவிட்டதால் அதே இடத்தில் மனோபால் என்பவர் மாடி வீடு கட்டி குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். மனோபால் எந்த ஆண்டு அந்த மாடிவீட்டிற்கு குடிபோனார் என்றால் ஞாபகமில்லை. 2016 ல் மனோபால் வீடுகட்டும்போது அந்த இடம் எங்களுக்கு

பாத்தியப்பட்டது குறித்து வழக்கு ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புல எண் 55/9 ல் பரிவர்த்தனை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அதன்பெயரில் என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் என் பெரியப்பா பெயரில் பட்டா உள்ளது. உயிலில் கண்டுள்ள அ பட்டி சொத்துக்கள் அவர் அவர்கள் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். ஆ பட்டியல் கண்ட 4 சொத்துக்கள் வைத்தியலிங்கம் என்பவர் எனக்கு எழுதிவைத்துள்ளார் ஆனால் பட்டா என் பெயரில் இல்லை வைத்தியலிங்கம் பெயரில் உள்ளது. வைத்தியலிங்கம் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2008ம் ஆண்டு. அவர் இறந்தபிறகு உயிலை நடைமுறைபடுத்த நான் ஏதும் ஏற்பாடு செய்தேனா என்றால் என் பெரியம்மா நான் இறந்த பிறகு பட்டா மாற்றிக்கொள் என்று கூறினார்கள் அதனால் பட்டா மாற்றவில்லை. 1975 பாகப்பிரிவினை காலத்திற்கு முன்பு வாய்மொழியாக பாகம் செய்துகொண்ட காலத்திலிருந்து புல எண் 55/9, 55/10 ஆகிய சொத்துக்களை பிரதிவாதிகள்தான் அனுபவித்துவருகிறார்கள் என்றால் 55/9 மட்டும் என் அனுபவத்தில் உள்ளது. புல எண் 55/9 என் அனுபவித்தில் இருந்து வருவதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் பெயரில் இல்லை என் பெரியப்பா பெயரில் உள்ளது. என் பெரியம்மா பெயரில் மாறியுள்ளதா என்றால் இல்லை. 1975ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எனது பெரியப்பா வைத்தியலிங்கம், தில்லைகண்ணு, என் தந்தை தங்கராசு, என் அத்தை அரும்பு ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை உயிலில் அ பட்டி சொத்துக்களாக கண்டு எழுதப்பட்டுள்ளது அது நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல

என்றும் தள்ளுபடி செய்யகூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

S.d/-Kuppusamy

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

S.d/-M.Ravichandran,B.A.,B.L.

District Munsif, Pattukkottai.